# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.161/2025

**Deposition of Witness for Prosecution PW 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மனோகரன் | Father's Name | : | திருஞானம் |
| Village | : | சேரன்குளம் | Taluk | : | சேரன்குளம் |
| Calling | : | | Age | : | 62 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 12th day of February 2026.**

**(A1 & A2 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது சேரன்குளத்தில் வசித்து வருகிறேன். நான் காண்டிராக்டர் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். இந்த வழக்கில் இறந்த அரவிந்த்மோகன் 1ம் எதிரியின் மகன் ஆவார். அரவிந்த்மோகன் வெட்டுப்பட்டதாக கேள்விபட்டு நான் மருத்துமனை சென்று பார்த்தேன். நான் விசாரித்ததில் யாரோ வெட்டியதாக என்னிடம் சொன்னார்கள். போலீசார் விசாரிக்கவில்லை.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.12 17:02:50 +0530

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் நான் காண்டிராக்ட் தொழில் செய்து வருகிறேன் எனவும் 1ம் எதிரியின் தங்கையை நான் திருமணம் செய்துள்ளேன் எனவும் 1ம் எதிரியும் காண்டிராக்ட்தொழில் செய்து வருகிறார் எனவும் அவருக்கு அரவிந்த்மோகன், அருண்மோகன் என 2 மகன்களும் இருந்தார்கள் அவர்கள் அனைவரும் ஒரே குடும்பமாக 1ம் எதிரி வீட்டில் வசித்து வந்தார்கள் எனவும் 1ம் எதிரி தொழில் தொடர்பான விஷயங்கள் கண்ணன் மற்றும் MR ஆகியோரிடம் தகவல் தெரிவித்தும் கலந்தாலோசிப்பார் எனவும் அவரது 2 மகன்களுக்கும் காண்டிராக்ட் தொழில் செய்வதில் தகராறு ஏற்பட்டு அரவிந்த்மோகன் தனியாக காண்டிராக்ட் வேலை செய் ஆரம்பித்தார் எனவும் பாலகிருஷ்ணனும் அவரது 2வது மகன்அருண்மோகனும் ஒன்றாக சேர்ந்து தனியாக காண்டிராக்ட் வேலை செய்து வந்தார்கள் எனவும் முதல் மகனின் மனைவியான ஜெயபிரதாவின் சகோதரியை அருண்மோகனுக்கு திருமணம் செய்து கொடுக்க சம்மதிக்காமல் வேறொருவருக்கு திருமணம் செய்து வைத்தார்கள் எனவும்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.12 17:02:57 +0530

அருண்மோகன் மன்னார்குடியில் தனியாக வீடு எடுத்து தங்கியிருந்தார் எனவும் அண்ணன் தம்பிகளுக்கிடையே சொத்தை பிரித்துக்கொள்வதற்கான பேச்சு வார்த்தை நடந்தது எனவும் 1ம் எதிரி சொத்தை தற்போது பிரிக்க வேண்டாம் காண்டிராக்ட்தொழில் செய்ய நான் பணம் தருகிறேன் என சொன்னதாகவும் அதற்கு முதல் மகன் ஒத்துக்கொள்ளவில்லை எனவும் அதனால் 1ம் எதிரி தன் மூத்த மகன் மீது கோவம் கொண்டு மன உளைச்சலுக்கு உள்ளாயிருந்தார் எனவும் இது சம்மந்தமாக அடிக்கடி பிரச்சனை ஏற்பட்டு நான், MR, கண்ணன் ஆகியோர் பேசி தீர்த்து வைத்தோம் எனவும் 07.05.2025 ம் தேதி இரவு 8.00 மணியளவில் நானும் 1, 2 எதிரிகள் மற்றும் இறந்துபோன அரவிந்த்மோகன் ஆகியோர் சமாதானம் பேசினோம் எனவும் அண்ணன், தம்பி இருவருக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டது எனவும் நான் நேரமாகிவிட்டது என்று காலையில் பேசிக் கொள்ளலாம் என மன்னார்குடி சென்று விட்டேன் எனவும் இரவு 9.30 மணியளவில் அவர்களுக்குள் என்ன பேசினார்கள் என்று எனக்கு தெரியவில்லை இரவு 10.30 மணியளவில் 1, 2 எதிரிகள் இருவரும் சேர்ந்து அரவிந்த்மோகனை அருவாளால் வெட்டிவிட்டார்கள் எனவும் அங்கு கண்ணனும் MR ம் வந்து விட்டார்கள் எனவும் நான் அனைவருக்கும் கைபேசி மூலம் மாறி மாறி போன் செய்தேன் எனவும்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.12 17:03:02 +0530

அருண்மோகனிடம் என்ன பிரச்சனை என்றாலும் பரவாயில்லை அண்ணனை ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோய் சேர் என சொன்னேன் எனவும் முதல் எதிரி எனக்கு போன் செய்து நான் போலீஸ் ஸ்டேஷன் போவதாக சொல்லிவிட்டு சென்று விட்டார் எனவும் பின்னர் MR, கண்ணன், ஜெயபிரதா ஆகியோர் அருண்மோகனிடம் கெஞ்சி கூத்தாடி தலையில் இரத்தக் காயத்துடன் இருந்த அரவிந்த்மோகன், அவரது தாயார் பவானி ஆகியோர்களை அருண்மோகன் காரில் ஏற்றிக்கொண்டு மன்னார்குடி அரசு மருத்துவமனை கொண்டுசென்று பின் மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தார்கள் எனவும் அங்கு அரவிந்த்மோகன் இறந்து விட்டதாகவும் அருண்மோகன் அவரது மனைவியை கூட்டிக்கொண்டு தலைமறைவாகி விட்டதாகவும் போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் தவறு. ஆஜர் எதிரிகள் என் மச்சான் மற்றும் மச்சான் மகன் என்பதால் நடந்த சம்பவத்தை மறைத்து தற்போது எதிரிகளை காப்பாற்றுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

**குறுக்கு விசாரணை (1ம் எதிரி தரப்பில்)**

1,2 எதிரிகள், இறந்துபோன் அரவிந்த்மோகன் ஆகியோருக்கு நான்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.12 17:03:10 +0530

உறவினர் என்றால் சரி. மேற்சொன்ன 3 நபர்களின் குடும்ப நடவடிக்கைகள் எனக்கு நன்றாக தெரியுமென்றால் சரி. 1ம் எதிரி கீழ் தளத்திலும் இறந்துபோன் அரவிந்த்மோகன் மாடியிலும் 2ம் எதிரி மன்னார்குடி RP சிவம் நகரிலும் வசித்து வருகிறார்கள். அவர்கள் 3 பேரும் தனித்தனியாகத்தான் காண்டிராக்ட் தொழிலை செய்து வருகிறார்கள். அவர்களுக்குள் உள்ள கணக்கு வழக்குகள் தனித்தனியாக பராமரிக்கப்பட்டது என்றால் சரி. இறந்த அரவிந்த்மோகன் புதிதாக காண்டிராக்ட் தொழில் ஆரம்பித்திருந்ததால் அவருக்கு வேண்டிய பொருளுதவியை 1ம் எதிரி செய்வார் என்றால் ஆமாம். நான் தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனையில் அரவிந்த்மோகனை போய் பார்த்தபோது அங்கிருந்த அவரது தாய் பவானி, அவரது மனைவி ஜெயபிரதா ஆகியோர் அரவிந்த் மோகனை யார் வெட்டினார்கள் என்று தெரியாது என சொன்னார்கள் என்றால் சரி.

**குறுக்கு விசாரணை (2ம் எதிரி தரப்பில்)**

நான் தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனையில் இருந்தபோது கோட்டூர் காவல் ஆய்வாளர் இவ்வழக்கு சம்மந்தமாக விசாரிக்க நள்ளிரவு 2.00 மணிக்கு வந்து விட்டார் என்றால் சரி. ஆய்வாளர் மருத்துமனையில் வைத்து இறந்தவரின் மனைவி ஜெயபிரதா, பவானி, சேரி கண்ணன், MR ஆகியோரிடம் நடந்த விபரத்தை கேட்டார்,

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.12 17:03:15 +0530

அவர்கள் நடந்த விபரத்தை சொன்னார்கள். ஜெயபிரதா சொல்ல சொல்ல கோட்டூர் காவல் ஆய்வாளர் எழுதிக் கொண்டார். ஜெயபிரதாவிடம் ஆய்வாளர் கையெழுத்து வாங்கி கொண்டார். 2ம் எதிரிதான் அரவிந்த்மோகன் மற்றும் பவானி ஆகியோரை மன்னார்குடி அரசு மருத்துவமனை மற்றும் தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனைக்கு அழைத்து சென்று சேர்த்தார். மீனாட்சி மருத்துவமனையில் நோயாளியை காப்பாற்றுவதற்கான உறுதிமொழி பத்திரத்தில் கையெழுத்து போட்டது, அரவிந்த்மோகனை காப்பாற்றுவதற்காக அனைத்து பில் தொகையும் 2ம் எதிரிதான் செய்தார் என்றால் சரி. என்னுடைய நண்பர் பாலாஜி, அருண்மோகனுக்கு நண்பர் என்பதால் அவருக்கு ரூ.50,000/- தொகை செலுத்தினார். மன்னார்குடி ஸ்ரீதர் மகனும் ரூ.50,000/- சிகிச்சைக்காக கொடுத்தார். என்னுடைய வங்கி கணக்கிலிருந்து 07.05.2025 தேதியில் 500 ரூபாயும் 08.05.2025 தேதியில் ரூ.4,770/-, ரூ.500/-, ரூ.513/-, ரூ.900/-, ரூ.16,200/-, ரூ.11,326/- மீனாட்சி மருத்துவமனைக்கு செலுத்தினேன். அதற்கான statement **எ.சா.ஆ.4** (எ.சா.ஆ.4 யை குறியீடு செய்வதற்கு அரசு தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. AIR 2001 SC 1158 தீர்ப்புரையை பின்பற்றியும் நீதியின் நலன் கருதியும் குறியீடு செய்யப்படுகிறது). அது தவிர ரூ.30,000/- தொகையை கையில் கொடுத்தேன்.

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.02.12 17:03:24 +0530

**எ.சா.ஆ.4 சம்மந்தமாக அரசு தரப்பில் செய்யப்படும் குறுக்கு விசாரணை**

08.05.2025 அன்று விடியற்காலை அரவிந்த்மோகன் இறந்துவிட்டார் என்றால் சரி. இறந்து போன அரவிந்த்மோகனுக்கு கட்டியதாக காட்டக்கூடிய விபரங்கள் எ.சா.ஆ.4 ல் காணப்படவில்லை என்றால் சரி. இதற்கான பில்கள் என்னிடம் உள்ளன, அதை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.12 17:03:31 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.161/2025

**Deposition of Witness for Prosecution PW 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Dr. கீதா | Father's Name | : | சுகுமார் |
| Village | : | நாகப்பட்டினம் | Taluk | : | நாகப்பட்டினம் |
| Calling | : | | Age | : | 32 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 12th day of February 2026.**

**(A1 & A2 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது நாகப்பட்டினம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 07.05.2025 அன்று மன்னார்குடி மாவட்ட தலைமை அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த போது இரவு 12.00 மணிக்கு அரவிந்த்மோகன், வயது 31, த/பெ.பாலகிருஷ்ணன், வடிவாய்க்கால் தெரு, மன்னார்குடி என்பவரை அவரது அம்மா பவானி அவர்கள் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவர் சுயநினைவுடன் இருந்தார். உறவினர்களும்

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.02.12 17:03:37 +0530

வந்திருந்தார்கள். உறவினர் ஒருவரிடம் விசாரித்தபோது தெரிந்த நபர் ஒருவர் கத்தியால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்தபோது அவருக்கு வலது, இடது கை, கால்கள் மற்றும் முகத்தின் இடது பக்கம் ஆழமான கிழிந்தகாயம் இருந்தது. உரிய சிகிச்சை அளித்து பின் மேல் சிகிச்சைகாக தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அந்த விபத்து பதிவேடு **அ.சா.ஆ.1**. அன்றைய தினமே இரவு 12.05 மணிக்கு பவானி, வயது 52, க/பெ. பாலகிருஷ்ணன், வடிவாய்க்கால் தெரு, மன்னார்குடி என்பவரை அவரது மகன் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவர் சுயநினைவுடன் இருந்தார். உறவினர்களும் வந்திருந்தார்கள். உறவினர் ஒருவரிடம் விசாரித்தபோது தனக்கு தெரிந்த நபர் ஒருவர் வெட்டியதால் நடு தலை பகுதியில் ஆழமான கிழிந்தகாயம் இருந்தது என சொன்னார். உரிய சிகிச்சை அளித்து பின் மேல் சிகிச்சைகாக தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அந்த விபத்து பதிவேடு **அ.சா.ஆ.2**.

**குறுக்கு விசாரணை (1ம் எதிரி தரப்பில்)**

காயம்பட்ட இரு நபர்களும் மருத்துவமனை வரும்போது சுயநினைவுடன் இருந்தார்கள் என்றால் சரி. தங்களுக்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது என்பதை இரு காயம்பட்ட நபர்களும் சொல்லவில்லை, அவர்களது உறவினர்கள்தான் சொன்னார்கள்.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.12 17:03:44 +0530

அரவிந்த்மோகன் மற்றம் பவானி ஆகியோருக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மை மற்றும் அளவீடுகள் பற்றி அ.சா.ஆ.1 மற்றும் அ.சா.ஆ.2 ல் குறிப்பிடவில்லை என்றால் சரி. அரவிந்த்மோகன் என்பவரை அவரது தாயார்தான் மருத்துவமனையில் சேர்த்தார் என்றால் ஆமாம். காயம்பட்ட பவானியை அவரது மகன்தான் மருத்துவமனையில் சேர்த்தார் என்றால் சரி.

**குறுக்கு விசாரணை (2 ம் எதிரி தரப்பில்)**

அ.சா.ஆ.1, அ.சா.ஆ.2 ல் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் இரவு 11.30 மணி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. அ.சா.ஆ.1, அ.சா.ஆ.2 ல் ஒரு நபரால் தாக்கியதாகத்தான் கண்டுள்ளது என்றால் சரி. அ.சா.ஆ.1 ல் 97518 87788 என்ற செல் நம்பர் குறிக்கப்பட்டுள்ளது என்றால் சரி. அ.சா.ஆ.2 ல் மேற்படி செல் நம்பரைதான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி. அது அவரது மகனின் செல் நம்பர். மகன் கொண்டு வந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி. இரத்த ஒழுகல் பற்றி 2 விபத்து பதிவேடுகளிலும் குறிப்பிடவில்லை என்றால் சரி.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.12 17:03:51 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS
# Chapter XXIII Code of Criminal Procedure
# IN THE COURT OF SESSIONS JUDGE
# TIRUVARUR
## Sessions Case No.161/2025

## Deposition of Witness for Prosecution PW 6

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | செந்தில்குமார் | Father's Name | : | ஜெயராமன் |
| Village | : | கீழச்சேரி | Taluk | : | மன்னார்குடி |
| Calling | : | | Age | : | 53 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 12th day of February 2026.**

**(A1 & A2 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது கீழச்சேரியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். 1ம் எதிரி என்மச்சான், 2ம் எதிரி அவரது மகன். அரவிந்த்மோகன் இறந்த விபரம் எனக்கு தெரியும். அவர்கள் வீட்டிலிருந்து 300 மீட்டர் தொலைவில் என் வீடு உள்ளது. சத்தம் கேட்டு 1ம் எதிரியின் வீட்டிற்கு வந்து பார்த்தபோது அரவிந்த்மோகன் இரத்தக் காயத்துடன் வீட்டு வாசலில் கிடந்தார். அவரை யார் வெட்டினார்கள், அவருக்கு எவ்வாறு இரத்தக் காயங்கள் ஏற்பட்டது எனக்கு தெரியாது. போலீசார் விசாரிக்கவில்லை.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.12 17:03:58 +0530

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் 07.05.2025 ம் தேதி எனக்கு கண்ணன் கொடுத்த தகவலின் பேரில் 1ம் எதிரியின் வீட்டிற்கு சென்று பார்த்தபோது ஜெயபிரதா தனது கணவர் அரவிந்த்மோகனை 1ம் எதிரி வெட்டிவிட்டதாக அழுது கொண்டிருந்தார் எனவும் ஆஸ்பத்திரிக்கு போக என்னை கூப்பிட்டார் 108 ஆம்புலன்சிற்கு தகவல் சொல்லியும் ஆம்புலன்ஸ் வரவில்லை எனவும் வீட்டிற்கு கண்ணன், MR மற்றும் சிலர் வந்து விட்டார்கள் எனவும் நானும் ஜெயபிரதாவும் அரவிந்த்மோகனை தூக்க முயற்சி செய்தபோது வீட்டின் தரையில் இரத்தம் அதிகமாக இருந்ததால் நான் வழுக்கி விழுந்து விட்டேன் எனவும் அருண்மோகனின் காரில் அரவிந்த்மோகனை ஏற்றினோம் அருண்மோகன் காரை எடுக்க மறுத்துவிட்டார் எனவும் பின்னர் ஜெயபிரதாவும் பவானியும் அருண்மோகனிடம் காரை எடுக்க சொல்லி கெஞ்சினார்கள் எனவும் பின்னர் அருண்மோகன் காரை மன்னார்குடி மருத்துவமனைக்கு ஓட்டி சென்றபோது காரில் நானும் பவானியும் அரவிந்த்மோகனும் இருந்தோம் எனவும் MR காரில் ஜெயபிரதா பின் தொடர்ந்து வந்தார் எனவும் வழியில் 108 ஆம்புலன்ஸ் வந்தது மாற்ற நேரமில்லை

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.12 17:04:05 +0530

என்பதால் காரிலேயே மன்னார்குடி அரசு மருத்துவமனை சென்று முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது எனவும் பின்னர் மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூருக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு சென்றோம் எனவும் அரவிந்த்மோகன் சிகிச்சை பலனின்றி விடியற்காலை இறந்துவிட்டார் எனவும் செய்தி கேள்விபட்டு அருண்மோகன் தலைமறைவாகி விட்டார் எனவும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் தவறு. ஆஜர் எதிரிகள் என் மைத்துனர் மற்றும் அவரது மகன் என்பதாலும் காயம்பட்ட பவானி என்னுடைய சொந்த சகோதரி என்பதாலும் நடந்த சம்பவத்தை மறைத்து தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

**குறுக்கு விசாரணை (1ம் எதிரி தரப்பில்)**

1, 2 எதிரிகள் மற்றும் இறந்த அரவிந்த்மோகன் ஆகியோரை எனக்கு தெரியும், அவர்கள் எனக்கு நெருங்கிய உறவினர்கள் என்றால் சரி. அரவிந்த்மோகன் இறக்கும்வரை அந்த குடும்பத்திற்குள் எந்தவிதமான பிரச்சனையும் கிடையாது என்றால் சரி. அந்த மூவருக்குள் சொத்து சம்மந்தமாக எந்த பஞ்சாயத்தும் நடந்தது கிடையாது என்றால் ஆமாம். அவர்கள் மூவரும் தனித்தனியாக காண்டிராக்ட் தொழில் செய்து வந்தார்கள் என்றால் சரி. பாலகிருஷ்ணன் வசம் உள்ள அனைத்து சொத்துக்களும் அவர் சுயமாக சம்பாதித்த சொத்துக்கள் என்றால் சரி. இறந்துபோன அரவிந்த்மோகனுக்கு

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.12 17:04:11 +0530

தொழில் நிமித்தமாக தேவைப்படும் பண உதவியை 1ம் எதிரிதான் செய்து வந்தார் என்றால் சரி. 1ம் எதிரி தஞ்சாவூரில் இறந்த அரவிந்த்மோகனுக்கு ஒரு வீடு வாங்கி வைத்துள்ளார் என்றால் சரி. 1ம் எதிரியின் குடும்ப நிகழ்ச்சிகள் அனைத்திலும் அவர்கள் மூவரும் ஒன்றாகத்தான் கலந்துகொள்வார்கள் என்றால் சரி. நான் வீட்டு வாசலில் சென்று பார்த்தபோது காயம்பட்ட அரவிந்த்மோகனை நானும் சேர்ந்து 2ம் எதிரி காரில் ஏற்றி அனுப்பினோம் என்றால் சரி. அந்த இடத்தில் காயம்பட்டிருந்த நபர்கள் பவானியும் அரவிந்த்மோகனும் மட்டும்தான் என்றால் ஆமாம். 2ம் எதிரியின் காரில் நான், இறந்த அரவிந்த்மோகன் மற்றும் பவானி ஆகிய மூவரும் சென்றோம் என்றால் சரி.

**குறுக்கு விசாரணை (2ம் எதிரி தரப்பில்)**

2ம் எதிரி அருண்மோகன்தான் இறந்த அரவிந்த்மோகனையும் அவரது தாயார் பவானியையும் மருத்துவமனையில் சேர்த்து அவர்களை காப்பாற்றுவதற்காக அனைத்து நடவடிக்கைகளும் எடுத்தார் என்றால் சரி.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.12 17:04:18 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.